This question paper contains **4** printed pages]

**Roll No.** | | | | | | | | | | | |

S. No. of Question Paper : **6834**

Unique Paper Code : **C-110 (XV)** **G**

Name of the Paper : **Application of Language Skills and Prose**

Name of the Course : **B.Com. (Hons.) Tamil Part-II**

Semester : **Annual Part II**

Duration : **2 Hours** Maximum Marks : **50**

*(Write your Roll No. on the top immediately on receipt of this question paper.)*

அ. கடிதத்தின் உறுப்புகளை விவரிக்க. 10

**அல்லது**

ஒரு நிறுவனம் தயாரிக்கும் பொருட்களின் விற்பனை உரிமை கோரி அந்நிறுவன மேலாளருக்கு ஒரு கடிதம் வரைக.

ஆ. கலைச்சொற்களின் இன்றியமையாமையை விளக்குக. 10

P.T.O.

**அல்லது**

கீழ்க்கண்ட கலைச்சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக.

(1) Current Account

(2) Co-operative Bank

(3) Consumer Goods

(4) Industrial Bank

(5) Fixed Deposit.

இ. கீழ்வரும் பத்தியைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்குத் தகுந்த விடை தருக. 10

இராமன் தாய்தந்தையர்களின் ஆணைப்படி கானகம் செல்ல மரவுரி பூண்டு ஒவ்வொரு வரிடமும் விடைபெற்றுக்கொண்டு தெருவினூடே செல்கிறான். அவனைத் தொடர்ந்து ஒரு ஜீவன் மட்டுமே செல்கிறது. சக்கரவர்த்தித் திருமகனாகப் பிறந்து, அரசபோகத்தில் வாழ்ந்து, எப்போதும்

பணியாட்கள் புடைசூழத் தேரேறிச் சென்றவன், இன்று லட்சக்கணக்கான மக்களும் உறவினர்களும் வாழும் அயோத்தியில், தன்னைப் பின்தொடர்ந்து வருபவர் தன் பிரியாத் தம்பியாகிய இலக்குவனைத் தவிர வேறொருவருமின்றி, நடைமெலிந்து செல்லும் இராமனைக் கண்ட நகர மாந்தர்கள், அடக்கமுடியாத துன்பத்தால் கண்ணீர் வடித்து, இப்பெருநகரில், இராமனுக்கு இலக்குவனைத் தவிர, அவனுடன் செல்ல வேறு உறவினர்களே இல்லாமற் போய்விட்டார்களோ என்று புடைத்துக்கொண்டு புலம்புகிறார்கள்.

(1) இராமன் கானகம் செல்லும்போது எத்தகைய ஆடை அணிந்திருந்தான்?

(2) இராமன் செல்லும்போது அவன் பின்னே சென்ற அந்த ஜீவன் யார்?

P.T.O.

(3) இலக்குவன் எத்தகைய வாழ்வு வாழ்ந்தவன்?

(4) இப்பத்தியில் இலக்குவனுக்குரிய அடைமொழியாக வரும் பெயர் எது?

(5) இப்பத்திக்குரிய தலைப்பைச் சூட்டி அதன் கருத்தைச் சுருக்கி எழுதுக.

ஈ. எவையேனும் இரு தலைப்புகளுக்குக் கட்டுரை வடிவில் விடைதருக. 2×10=20

(1) தமிழ்நாட்டு வணிகர்

(2) தமிழகத்தில் நிலவிய பண்டமாற்று முறைகள்

(3) விளைபொருட்களும் உற்பத்திப் பொருட்களும்

(4) இலங்கைத் துறைமுகங்கள்